# புதிய குடும்ப அட்டை பெறுவதற்கு

(பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்)

அனுப்புநர் நாள்: . . . . . . .

(பெயர் முகவரி)

பெறுநர்

பொது தகவல் அதிகாரி,
வட்டார உணவுப் பொருள் வழங்கல் அதிகாரி அலுவலகம்,
. . . . . . . . . . . .

அய்யா,

பொருள்: தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005 - குடும்ப அட்டை பெறுவது தொடர்பான தகவல்கள் கோருதல் - தொடர்பாக

பார்வை: குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்த எனது மனு நாள்: . . . . . . .
(இணைக்கப்பட்டுள்ளது)

- - - - - -

தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005, பிரிவு 6(3)-ன் கீழ் நான் கீழே கேட்டுள்ள தகவல்களை வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

1)அ) ஒருவர் குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்து, எத்தனை நாட்களில் குடும்ப அட்டை வழங்கப்பட வேண்டும்? ஆ) எத்தனை நாட்களில் நிராகரித்து தகவல் அனுப்ப வேண்டும்?

2) அ) -------------- முதல் ----------------- வரை மொத்தம் எத்தனை பேர் குடும்ப அட்டை வேண்டி தங்கள் அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளனர் ? ஆ. அவர்களில் எத்தனை பேருக்கு குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது ? இ. எத்தனை பேருக்கு வழங்கப்படவில்லை ?

3) நான் குடும்ப அட்டைக்கு விண்ணப்பித்த மனு தங்கள் அலுவலக பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டதா?
அ. ஆம் எனில் பதிவு எண், பதிவேட்டின் பக்க எண் என்ன ?
ஆ. பதிவு செய்தவர் பெயர், பதவியின் பெயர் என்ன?
இ. அந்த பதிவேடு அலுவலக அதிகாரியால் மீள்பார்வை (Review) செய்யப்பட்டதா ?

4) எனக்கு குடும்ப அட்டை வழங்க வேண்டிய பொறுப்பான அதிகாரியின் பெயர் மற்றும் பதவியின் பெயர் தெரிவிக்கவும்.

5) அ. எனது குடும்ப அட்டைக்காக கெடுக்கப்பட்ட மனுவின் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டதா ?
ஆ. ஆம் எனில், ஆய்வு செய்த நாள், ஆய்வு செய்தவரின் பெயர், ஆய்வு முடிவு - நகல் தரவும்.
இ. இல்லை எனில் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 4(1)d ன்படி அதற்கான காரணங்களைத் தெரிவிக்கவும்.

6) தங்கள் அலுவலகத்தில் விண்ணப்பித்த மனுமீது எத்தனை நாட்களில் பரிசீலனை செய்து முடிவு தெரிவிக்க வேண்டும் என்று விதிமுறை உள்ளது? அந்த விதிகளின் ஒளிநகல் வழங்கவும்.

7) அ. குடும்ப அட்டை வேண்டி மனு செய்ய என்னென்ன, ஆவணங்கள் இணைக்கப் படவேண்டும்?
ஆ. எனது மனுவில் இணைப்புகள் முழுமையாக, முறையாக இருக்கின்றதா?
இ. இல்லை எனில், அதுபற்றி எனக்கு தகவல் ஏதேனும் தெரிவிக்கப்பட்டதா? ஆம் எனில் அதன் ஒளிநகல் வழங்கவும்.
ஈ. அம்மனு இப்போது யாரிடம் என்ன நிலையில் இருக்கிறது?எத்தனை நாட்களில் எனக்கு குடும்ப அட்டை வழங்கப்படும்.
உ. நான் விண்ணப்பித்தபின் விண்ணப்பித்தவர், எத்தனை பேருக்கு குடும்ப அட்டை வழங்கப்பட்டது?
ஊ. . . . . . . . ஆண்டில் குடும்ப அட்டை வழங்கிய விவரம் பதிவு செய்யப்பட்டுள்ள பதிவேட்டின் ஒளிநகல் வழங்கவும்.

8) அ. தங்கள் அலுவலகத்தில் அரசு ஆணை எண் : 114/2006 (P&AR) பின்பற்றப் படுகிறதா ?
ஆ. ஆம் எனில் இதுவரை எனக்கு ஏதாவது கடிதம் அனுப்பப்பட்டுள்ளதா ?
இ. அனுப்பியிருந்தால் அதன் நகல் ஒன்று வழங்கவும்
ஈ. இல்லை எனில், அதற்கு ஏதாவது பதிவு செய்யப்பட்டுள்ள காரணங்கள் இருப்பின் அவைகளைத் தெரிவிக்கவும்.

9) மேற்படி அனைத்து கோப்புகளையும் பார்வையிடவும், தேவையான சான்றளிக்கப்பட்ட நகல் எடுக்கவும், நேரம், நாள் ஒதுக்கி எனக்கு தெரிவிக்கவும்.

மேற்கண்ட தகவல்களைப் பெறுவதற்காக ரூ.10/- க்கு நீதிமன்ற வில்லை ஒட்டியுள்ளேன்.

இப்படிக்கு,
(மனுதாரர் பெயர் மற்றும் ஒப்பம்)